அலகு 8 நிதிநிலை அறிக்கைப் பகுப்பாய்வு

சூத்திரங்கள், மாதிரிப் படிவம் மற்றும் பயிற்சி கணக்குகள்

1. **நிறுமத்தின் நிதிநிலை அறிக்கை:**

நிறுமங்களின் நிதிநிலை அறிக்கைகள் தயாரிக்கப்படும்போது இந்திய நிறுமச்சட்டம் 2013–ன் படி பின்வரும் விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்:

(i) பிரிவு 2(40)–ன் படி நிதிநிலை அறிக்கைகள் என்பது இருப்புநிலைக்குறிப்பு, இலாபநட்டக் கணக்கு / வருவாய் செலவினக் கணக்கு, ரொக்க ஓட்ட அறிக்கை, பங்கு மூலதனத்தின் மாற்றம் குறித்த அறிக்கை மற்றும் மேற்கண்டவகைகளின் விளக்கக் குறிப்பு ஏதேனும் இருந்தால் அவற்றையும் குறிக்கும்.

(ii) இந்திய நிறுமச்சட்டம் 2013 பிரிவு 129 (1)–ன் படி நிதிநிலை அறிக்கைகள், நிறும நடவடிக்கைகளின் உண்மையான, நியாயமான நிலையை எடுத்துக்காட்டுவதாகவும் பிரிவு 133–ல் கொடுக்கப்பட்டுள்ள தரநிலைகளின் படியும் இருக்க வேண்டும் என்று கூறுகிறது.

(iii) மேலும், பிரிவு 129 (1)–ன் படி நிதிநிலை அறிக்கைகள் இந்திய நிறுமச்சட்டம் 2013 பட்டியல் III–ல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் படியே தயாரிக்கப்பட வேண்டும் எனவும் கூறுகிறது.

குறிப்பு:புத்தகத்தில் பக்கம் எண் 266, 267 மற்றும் 268-ல் கொடுக்கப்பட்டுள்ள நிறுமத்தின் இலாபநட்ட அறிக்கை மற்றும் இருப்புநிலைக் குறிப்பின் மாதிரிப் படிவத்தினை நன்கு அறிந்து கொள்ள வேண்டும். மேலும் மாதிரிப் படிவத்தில் இடம் பெற்றுள்ள இனங்களை நன்கு அடையாளம் கண்டு கொள்ளவும். அவ்வாறு செய்வதன் மூலம் அலகு 9-விகிதப் பகுபாய்வு விகிதம் எளிதில் கற்க முடியும்.

2. **நிதிநிலைப் அறிக்கைப் பகுப்பாய்விற்கான கருவிகள்:**

   1. ஒப்பீட்டு அறிக்கை(அ)ஒப்பு நோக்கு பகுப்பாய்வு(அ)கிடைமட்டப் பகுப்பாய்வு
   2. பொது அளவு அறிக்கை(அ)செங்குத்துப் பகுப்பாய்வு
   3. போக்குப் பகுப்பாய்வு
   4. நிதி ஓட்டப் பகுப்பாய்வு
   5. ரொக்க ஓட்டப் பகுப்பாய்வு

நிதி ஓட்டப்பகுப்பாய்வு மற்றும் ரொக்க ஓட்டப்பகுப்பாய்வு இரண்டும் தாங்கள் கல்லூரி மேற்படிப்பில் பயிலுவீர்கள். ஆகையால் அதன் பொருளை தங்கள் ஆசிரியரின் துணை கொண்டு நன்கு தெரிந்து கொள்ளுங்கள்.

3. **ஒப்பீட்டு அறிக்கை(அ)ஒப்பு நோக்கு பகுப்பாய்வு(அ)கிடைமட்டப் பகுப்பாய்வு தயாரித்தல்**

பின்பற்ற வேண்டிய படிநிலைகள் மற்றும் மாதிரிப் படிவம்:

(i) பத்தி 1 : இந்தப் பத்தியில் வருமான அறிக்கை மற்றும் இருப்புநிலைக்குறிப்பில் உள்ள விவரங்கள் பதியப்படும்

(ii) பத்தி 2 : முதல் ஆண்டிற்கான தொகையைப் பதிவு செய்யவும்

(iii) பத்தி 3 : இரண்டாம் ஆண்டிற்கான தொகையைப் பதிவு செய்யவும்

(iv) பத்தி 4 : முதலாண்டு தொகைக்கும் இரண்டாமாண்டு தொகைக்கும் இடையேயான வேறுபாட்டினைக் காட்டவும். 2–ம் ஆண்டில் மதிப்பு அதிகரித்திருந்தால் கூட்டல் அடையாளமும் மதிப்பு குறைந்திருந்தால் கழித்தல் அடையாளமும் இட வேண்டும்.

(v) பத்தி 5 : 4–ஆம் பத்தியில் கொடுக்கப்பட்டுள்ள தொகையினை இரண்டாம் பத்தியில் (முதல் ஆண்டு தொகை) கொடுக்கப்பட்டுள்ள தொகையுடன் வகுத்து (கூடும் அல்லது குறையும் தொகை) 4–ஆம் பத்தியின் தொகைக்கான கூடும் அல்லது குறையும் சதவீதத்தினைக் காட்டவும்.

$$\text{கூடும் அல்லது குறையும் சதவீதம்} = \frac{\text{கூடும் அல்லது குறையும் தொகை}}{\text{முதல் ஆண்டிற்கான தொகை}} \times 100$$

ஒப்பு நோக்கும் அறிக்கையின் படிவம்

விவரம்	ஆண்டு 1	ஆண்டு 2	தொகையின் கூடுதல் (+) அல்லது குறைவு (–)	சதவீதத்தின் கூடுதல் (+) அல்லது குறைவு (–)
	₹	₹	₹	
(1)	(2)	(3)	(4)	(5)

4. <u>பொது அளவு அறிக்கை(அ)செங்குத்துப் பகுப்பாய்வு தயாரித்தல்</u>

பின்பற்ற வேண்டிய படிநிலைகள் மற்றும் மாதிரிப் படிவம்:

பொது அளவு அறிக்கைகள் மூன்று பத்திகளுடன் தயாரிக்கப்படுகின்றன. பொது அளவு அறிக்கைகள் தயாரிக்க பின்வரும் படிநிலைகள் பின்பற்றப்படுகின்றன.

(i) **பத்தி 1** – வருமான அறிக்கை அல்லது இருப்புநிலைக் குறிப்பில் உள்ள இனங்களின் விவரங்கள் இப்பத்தியில் எழுதப்படுகின்றன.

(ii) **பத்தி 2** – தொகையினைப் பதிவு செய்யவும்.

(iii) **பத்தி 3** – பொதுவான அடிப்படையாக 100 என்பதை எடுத்துக் கொள்ளவும். எடுத்துக்காட்டாக விற்பனை மூலம் பெற்ற வருவாய் என்பது வருமான அறிக்கைக்கு அடிப்படையாகவும், இருப்புநிலைக் குறிப்பின் மொத்தத் தொகை, இருப்புநிலைக் குறிப்பிற்கு அடிப்படையாகவும் எடுத்துக்கொள்ளப்படலாம். பத்தி 2–ல் உள்ள விவரங்களுக்கு பொதுவான அடிப்படையை கொண்டு சதவீதம் கணக்கீடு செய்து 3–ஆம் பத்தியில் பதிவு செய்யவும்.

பொது அளவு அறிக்கையின் படிவம்

விவரம்	தொகை	சதவீதம்

5. <u>போக்குப் பகுப்பாய்வு தயாரித்தல்</u>

பின்பற்ற வேண்டிய படிநிலைகள்

(i) கொடுக்கப்பட்ட ஆண்டுகளில் முதலாவது ஆண்டை அடிப்படை ஆண்டாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

(ii) அடிப்படை ஆண்டின் எண்ணாக 100ஐ எடுத்துக் கொள்ளவும்.

(iii) அடிப்படை ஆண்டின் எண்ணிலிருந்து மற்ற ஆண்டுகளின் சதவீதத்தை வெளிக் கொண்டு வந்து போக்கினைக் கணக்கிடலாம்.

<u>**குறிப்பு:**</u> மாணவர்கள் ஒப்பீட்டு அறிக்கை, பொது அளவு அறிக்கை மற்றும் போக்குப் பகுப்பாய்வு போன்றவை எவ்வாறு தயார் செய்வது என்பதை படிநிலைகளின் துணை கொண்டு நன்றாக கற்றுக் கொள்ளவும். எளிமையாக தேர்வில் மதிப்பெண் பெறுவதற்கான பாடப்பகுதி இது….

நினைவில் கொள்ள வேண்டியவை

- நிதிநிலை அறிக்கைகள், பொதுவாக வருமான அறிக்கை மற்றும் இருப்புநிலைக் குறிப்பு என்ற இரண்டு அடிப்படை அறிக்கைகளைக் குறிக்கிறது.
- குறிப்புகள் மற்றும் பட்டியல்கள் ஆகியவையும் நிதிநிலை அறிக்கைகளின் பகுதி ஆகும்.
- நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு, ஒப்பீட்டு அறிக்கை, பொது அளவு அறிக்கை, போக்கு பகுப்பாய்வு, நிதி ஓட்ட அறிக்கை மற்றும் ரொக்க ஓட்ட அறிக்கை போன்ற கருவிகளை உள்ளடக்கியதாகும்.
- ஒப்பீட்டு அறிக்கை என்பது ஒரு வணிக நிறுவனத்தின் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகளின் நிதிநிலை அறிக்கைகளில் உள்ள தனித்தனி இனங்களின் நிகர அதிகரிப்பு அல்லது நிகர குறைவு குறித்த ஒப்பீடுகளைத் தரும் அறிக்கையே ஆகும்.
- பொது அளவு அறிக்கை சில பொது அடிப்படைகளைக் கொண்டு பல்வேறு இனங்களின் தொடர்பினைக் காட்டுவதாகும். பொது அளவு அறிக்கை இனங்கள், பொது அளவு அடிப்படையின் சதவிகிதமாக காட்டப்படுகின்றன.
- போக்கு பகுப்பாய்வு பல ஆண்டுகளுக்கு மேலுள்ள தொகைகளில் ஏற்படும் மாற்றங்களை ஆய்வு செய்வதாகும்.

<u>***பயிற்சி வினாக்கள்***</u>

<u>**ஒப்பீட்டு அறிக்கைப் பகுப்பாய்வு**</u>

(i) பத்தி 1 : இந்தப் பத்தியில் வருமான அறிக்கை மற்றும் இருப்புநிலைக்குறிப்பில் உள்ள விவரங்கள் பதியப்படும்

(ii) பத்தி 2 : முதல் ஆண்டிற்கான தொகையைப் பதிவு செய்யவும்

(iii) பத்தி 3 : இரண்டாம் ஆண்டிற்கான தொகையைப் பதிவு செய்யவும்

(iv) பத்தி 4 : முதலாண்டு தொகைக்கும் இரண்டாமாண்டு தொகைக்கும் இடையேயான வேறுபாட்டினைக் காட்டவும். 2–ம் ஆண்டில் மதிப்பு அதிகரித்திருந்தால் கூட்டல் அடையாளமும் மதிப்பு குறைந்திருந்தால் கழித்தல் அடையாளமும் இட வேண்டும்.

(v) பத்தி 5 : 4–ஆம் பத்தியில் கொடுக்கப்பட்டுள்ள தொகையினை இரண்டாம் பத்தியில் (முதல் ஆண்டு தொகை) கொடுக்கப்பட்டுள்ள தொகையுடன் வகுத்து (கூடும் அல்லது குறையும் தொகை) 4–ஆம் பத்தியின் தொகைக்கான கூடும் அல்லது குறையும் சதவீதத்தினைக் காட்டவும்.

$$\text{கூடும் அல்லது குறையும் சதவீதம்} = \frac{\text{கூடும் அல்லது குறையும் தொகை}}{\text{முதல் ஆண்டிற்கான தொகை}} \times 100$$

குறிப்பு:

தொகையின் மாற்றம் = நடப்பாண்டு தொகை – முந்தைய ஆண்டு தொகை

% மாற்றம் = தொகையின் மாற்றம்/முந்தைய ஆண்டு தொகை

1. அருள் நிறுமத்தின் மார்ச்,31, 2016 மற்றும் மார்ச்,31, 2017-ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான ஒப்பீட்டு வருமான அறிக்கை

விவரம்	2015-16 ₹	2016-17 ₹	தொகையின் மாற்றம்₹	% மாற்றம்
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	50000	60000	**10000**	**20%**
கூட்டுக:இதர வருமானம்	10000	30000	**20000**	**200%**
மொத்த வருமானம்	**60000**	**90000**	**30000**	**50%**
கழிக்க:செலவுகள்	40000	50000	**10000**	**25%**
வரிக்கு முன்உள்ள இலாபம்	**20000**	**40000**	**20000**	**100%**

2. பரணி நிறுமத்தின் மார்ச்,31, 2017 மற்றும் மார்ச்,31, 2018-ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான ஒப்பீட்டு வருமான அறிக்கை

விவரம்	2015-16 ₹	2016-17 ₹	தொகையின் மாற்றம்₹	% மாற்றம்
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	30000	45000	15000	**50%**
கூட்டுக:இதர வருமானம்	4000	6000	2000	**50%**
மொத்த வருமானம்	**34000**	**51000**	17000	**50%**
கழிக்க:செலவுகள்	10000	15000	5000	**50%**
வரிக்கு முன் உள்ள இலாபம்	**24000**	**36000**	12000	**50%**
கழிக்க:வருமானவரி	7200	10800	3600	**50%**
வரிக்கு பின் உள்ள இலாபம்	16800	25200	8400	**50%**

3. டேனியல் நிறுமத்தின் மார்ச்,31, 2016 மற்றும் மார்ச்,31, 2017-ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான ஒப்பீட்டு வருமான அறிக்கை

விவரம்	2015-16 ₹	2016-17 ₹	தொகையின் மாற்றம்₹	% மாற்றம்
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	40000	50000	10000	**25%**
கூட்டுக:இதர வருமானம்	-	-	-	-
மொத்த வருமானம்	**40000**	**50000**	10000	**25%**
கழிக்க: இயக்கச் செலவுகள்	25000	27500	2500	**10%**
வரிக்கு முன் உள்ள இலாபம்	**15000**	**22500**	7500	**50%**
கழிக்க:வருமானவரி	4500	6750	2250	**50%**
வரிக்கு பின் உள்ள இலாபம்	10500	15750	5250	**50%**

4. முத்து நிறுமத்தின் மார்ச்,31, 2017 மற்றும் மார்ச்,31, 2018-ஆம் நாளன்றைய ஒப்பீட்டு நிதிநிலையறிக்கை

விவரம்	31.3.2017 ₹	31.3.2018 ₹	தொகையின் மாற்றம்₹	% மாற்றம்
I. பங்கு மூலதனம் (ம) பொறுப்புகள்				
பங்குதாரர் நிதி	400000	440000	40000	**10%**
நீண்டகாலப் பொறுப்புகள்	150000	165000	15000	**10%**
நடப்புப் பொறுப்புகள்	75000	82500	7500	**10%**
மொத்தம்	625000	687500	26500	**10%**
II. சொத்துகள்				

நீண்டகாலப் சொத்துகள்	500000	600000	100000	20%
நடப்புப் சொத்துகள்	125000	87500	37500	30%
மொத்தம்	**625000**	**687500**	**26500**	**10%**

5. **கலா நிறுமத்தின் மார்ச்,31, 2017 மற்றும் மார்ச்,31, 2018-ஆம் நாளன்றைய ஒப்பீட்டு நிதிநிலையறிக்கை**

விவரம்	31.3.2017 ₹	31.3.2018 ₹	தொகையின் மாற்றம்₹	% மாற்றம்
I. பங்கு மூலதனம் (ம) பொறுப்புகள்				
1. பங்குதாரர் நிதி				
அ) பங்குமுதல்	300000	360000	**60000**	**20%**
ஆ) காப்பும் மிகுதியும்	50000	50000	-	-
2. நீண்டகாலப் பொறுப்புகள்				
நீண்டகாலப் கடன்கள்	50000	40000	-10000	-20%
3. நடப்புப் பொறுப்புகள்				
கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள்	20000	12000	-8000	-40%
மொத்தம்	**420000**	**462000**	42000	**10%**
II. சொத்துகள்				
1. நீண்டகாலச் சொத்துகள்				
அ) நிலைச் சொத்துகள்	250000	290000	40000	16%
ஆ) நீண்டகால முதலீடுகள்	50000	40000	-10000	-20%
2. நடப்புப் சொத்துகள்				
சரக்கிருப்பு	80000	100000	20000	25%
ரொக்கம்(ம)ரொக்கத்திற்கு சமமானவை	40000	32000	-8000	-20%
மொத்தம்	**420000**	**462000**	42000	**10%**

பொது அளவு அறிக்கை

பொது அளவு அறிக்கைகள் மூன்று பத்திகளுடன் தயாரிக்கப்படுகின்றன. பொது அளவு அறிக்கைகள் தயாரிக்க பின்வரும் படிநிலைகள் பின்பற்றப்படுகின்றன.

(i) **பத்தி 1** – வருமான அறிக்கை அல்லது இருப்புநிலைக் குறிப்பில் உள்ள இனங்களின் விவரங்கள் இப்பத்தியில் எழுதப்படுகின்றன.

(ii) **பத்தி 2** – தொகையினைப் பதிவு செய்யவும்.

(iii) **பத்தி 3** – பொதுவான அடிப்படையாக 100 என்பதை எடுத்துக் கொள்ளவும். எடுத்துக்காட்டாக விற்பனை மூலம் பெற்ற வருவாய் என்பது வருமான அறிக்கைக்கு அடிப்படையாகவும், இருப்புநிலைக் குறிப்பின் மொத்தத் தொகை, இருப்புநிலைக் குறிப்பிற்கு அடிப்படையாகவும் எடுத்துக்கொள்ளப்படலாம். பத்தி 2–ல் உள்ள விவரங்களுக்கு பொதுவான அடிப்படையை கொண்டு சதவீதம் கணக்கீடு செய்து 3–ஆம் பத்தியில் பதிவு செய்யவும்.

குறிப்பு:

% வி.மூ.பெ.வ = குறிப்பட்ட வருமான அறிக்கை தகவல்/பொதுவான அடிப்படை(வி.மூ.பெ.வ)

% சொ/பொ= குறிப்பட்ட நிதிநிலை அறிக்கை தகவல்/பொதுவான அடிப்படை(இருப்புநிலைக் குறிப்பின் மொத்தம்)

6. **ராதா நிறுமத்தின் மார்ச்31, 2017-ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான பொது அளவு வருமான அறிக்கை**

விவரம்	2016-17 ₹	% வி.மூ.பெ.வ
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	450000	**100%**
கூட்டுக:இதர வருமானம்	67500	**15%**
மொத்த வருமானம்	**517500**	**115%**
கழிக்க:செலவுகள்	135000	**30%**
வரிக்கு முன் உள்ள இலாபம்	**382500**	**85%**
கழிக்க:வருமானவரி	-	
வரிக்கு பின் உள்ள இலாபம்	**382500**	**85%**

7. **மரியா (ம)கலா நிறுமத்தின் மார்ச்31, 2019-ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான பொது அளவு வருமான அறிக்கை**

விவரம்	மரியா	% வி.மூ.பெ.வ	குலா	% வி.மூ.பெ.வ
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	100000	**100%**	200000	**100%**
கூட்டுக:இதர வருமானம்	10000	**10%**	30000	**15%**
மொத்த வருமானம்	**110000**	**110%**	**230000**	**115%**

கழிக்க:செலவுகள்	70000	**70%**	120000	**60%**
வரிக்கு முன் உள்ள இலாபம்	**40000**	**40%**	**110000**	**55%**

8. <u>சாம் நிறுமத்தின் மார்ச்31, 2016(ம) மார்ச்31, 2017-ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கானபொது அளவு வருமான அறிக்கை</u>

விவரம்	2015-16 ₹	% வி.மூ.பெ.வ	2016-17 ₹	% வி.மூ.பெ.வ
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	400000	**100%**	500000	**100%**
கூட்டுக:இதர வருமானம்	80000	**20%**	50000	**10%**
மொத்த வருமானம்	**480000**	**120%**	**550000**	**110%**
கழிக்க:செலவுகள்	240000	**60%**	250000	**50%**
வரிக்கு முன் உள்ள இலாபம்	**240000**	**60%**	**300000**	**60%**
கழிக்க:வருமானவரி	72000	**18%**	90000	**18%**
வரிக்கு பின் உள்ள இலாபம்	**168000**	**42%**	**210000**	**42%**

9. **மீனா நிறுமத்தின் மார்ச்,31, 2018-ஆம் நாளன்றைய பொது அளவு நிதிநிலையறிக்கை**

விவரம்	31.3.2018 ₹	% சொ/பொ
III. பங்கு மூலதனம் (ம) பொறுப்புகள்		
பங்குதாரர் நிதி	200000	**50%**
நீண்டகாலப் பொறுப்புகள்	160000	**40%**
நடப்புப் பொறுப்புகள்	40000	**10%**
மொத்தம்	**400000**	**100%**
IV. சொத்துகள்		
நீண்டகாலப் சொத்துகள்	300000	**75%**
நடப்புப் சொத்துகள்	100000	**25%**
மொத்தம்	**400000**	**10%**

10. **ராணி நிறுமத்தின் மார்ச்,31, 2016 மற்றும் மார்ச்,31, 2017-ஆம் நாளன்றைய பொது அளவு நிதிநிலையறிக்கை**

விவரம்	31.3.2016 ₹	% சொ/பொ	31.3.2017 ₹	% சொ/பொ
V. பங்கு மூலதனம் (ம) பொறுப்புகள்				
பங்குதாரர் நிதி	540000	**60%**	600000	**60%**
நீண்டகாலப் பொறுப்புகள்	270000	**30%**	250000	**25%**
நடப்புப் பொறுப்புகள்	90000	**10%**	150000	**15%**
மொத்தம்	**900000**	**100%**	**1000000**	**100%**
VI. சொத்துகள்				
நீண்டகாலப் சொத்துகள்	720000	**80%**	800000	**80%**
நடப்புப் சொத்துகள்	180000	**18%**	200000	**20%**
மொத்தம்	**900000**	**100%**	**1000000**	**100%**

11. **யாஸ்மின்(ம)சக்தி நிறுமத்தின் பொது அளவு நிதிநிலையறிக்கை**

விவரம்	யாஸ்மின்	% சொ/பொ	சக்தி	% சொ/பொ
I. பங்கு மூலதனம் (ம) பொறுப்புகள்				
1. பங்குதாரர் நிதி				
அ) பங்குமுதல்	200000	**40%**	300000	**50%**
ஆ) காப்பும் மிகுதியும்	50000	**10%**	60000	**10%**
2. நீண்டகாலப் பொறுப்புகள்				
நீண்டகாலப் கடன்கள்	150000	**30%**	180000	**30%**
3. நடப்புப் பொறுப்புகள்				
கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள்	100000	**20%**	60000	**10%**
மொத்தம்	**500000**	**100%**	**600000**	**100%**
II. சொத்துகள்				
1. நீண்டகாலச் சொத்துகள்				

அ) நிலைச் சொத்துகள்	200000	**40%**	300000	**50%**
ஆ) நீண்டகால முதலீடுகள்	50000	**10%**	120000	**20%**
2. நடப்புப் சொத்துகள்				
சரக்கிருப்பு	200000	**40%**	90000	**15%**
ரொக்கம்(ம)ரொக்கத்திற்கு சமமானவை	50000	**10%**	90000	**15%**
மொத்தம்	500000	**100%**	600000	**100%**

போக்கு ஆய்வு:

(i) கொடுக்கப்பட்ட ஆண்டுகளில் முதலாவது ஆண்டை அடிப்படை ஆண்டாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

(ii) அடிப்படை ஆண்டின் எண்ணாக 100ஐ எடுத்துக் கொள்ளவும்.

(iii) அடிப்படை ஆண்டின் எண்ணிலிருந்து மற்ற ஆண்டுகளின் சதவீதத்தை வெளிக் கொண்டு வந்து போக்கினைக் கணக்கிடலாம்.

12. கலா நிறுமத்தின் மார்ச்,31, 2017, மார்ச்,31, 2017 மற்றும் மார்ச்,31, 2018-ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான போக்குப் பகுப்பாய்வு வருமான அறிக்கை(₹ஆயிரத்தில்)

விவரம்	2015-16 ₹	2016-17 ₹	2016-17 ₹	போக்கு விகிதம்		
				2015-16	**2016-17**	**2017-18**
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	400	500	600	**100%**	**125%**	**150%**
கூட்டுக:இதர வருமானம்	100	150	200	**100%**	**150%**	**200%**
மொத்த வருமானம்	**500**	**650**	**800**	**100%**	**130%**	**160%**
கழிக்க:செலவுகள்	200	290	350	**100%**	**145%**	**175%**
வரிக்கு முன் உள்ள இலாபம்	**300**	**360**	**450**	**100%**	**120%**	**150%**

13. கவிதா நிறுமத்தின் மார்ச்,31, 2017, மார்ச்,31, 2017 மற்றும் மார்ச்,31, 2018-ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான போக்குப் பகுப்பாய்வு வருமான அறிக்கை(₹ஆயிரத்தில்)

விவரம்	2015-16 ₹	2016-17 ₹	2016-17 ₹	போக்கு விகிதம்		
				2015-16	**2016-17**	**2017-18**
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	100	125	150	**100%**	**125%**	**150%**
கூட்டுக:இதர வருமானம்	20	25	30	**100%**	**125%**	**150%**
மொத்த வருமானம்	**120**	**150**	**180**	**100%**	**125%**	**150%**
கழிக்க:செலவுகள்	100	120	80	**100%**	**120%**	**80%**
வரிக்கு முன் உள்ள இலாபம்	**20**	**30**	**100**	**100%**	**150%**	**500%**
கழிக்க:வருமான வரி	**6**	**9**	**30**	**100%**	**150%**	**500%**
வரிக்கு முன் உள்ள இலாபம்	**14**	**21**	**70**	**100%**	**150%**	**500%**

14. கவிதா நிறுமத்தின் மார்ச்,31, 2017, மார்ச்,31, 2017 மற்றும் மார்ச்,31, 2018-ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான போக்குப் பகுப்பாய்வு வருமான அறிக்கை(₹ஆயிரத்தில்)

விவரம்	2015-16 ₹	2016-17 ₹	2016-17 ₹	போக்கு விகிதம்		
				2015-16	**2016-17**	**2017-18**
விற்பனை மூலம் பெற்ற வருவாய்	300	270	150	**100%**	**90%**	**50%**
கூட்டுக:இதர வருமானம்	50	80	60	**100%**	**160%**	**120%**
மொத்த வருமானம்	**350**	**350**	**210**	**100%**	**100%**	**60%**
கழிக்க:செலவுகள்	250	200	125	**100%**	**80%**	**50%**
வரிக்கு முன் உள்ள இலாபம்	**100**	**150**	**85**	**100%**	**150%**	**85%**
கழிக்க:வருமான வரி	**40**	**60**	**34**	**100%**	**150%**	**85%**
வரிக்கு முன் உள்ள இலாபம்	**60**	**90**	**51**	**100%**	**150%**	**85%**

15. அனு நிறுமத்தின் போக்குப் பகுப்பாய்வு நிதிநிலை அறிக்கை(₹ஆயிரத்தில்)

விவரம்	1ஆம் ஆண்டு	2ஆம் ஆண்டு	3ஆம் ஆண்டு	போக்கு விகிதம்		
				1ஆம் ஆண்டு	2ஆம் ஆண்டு	3ஆம் ஆண்டு
III. பங்கு மூலதனம் (ம) பொறுப்புகள்						
4. பங்குதாரர் நிதி						
அ) பங்குமுதல்	100	127	106	**100%**	**127%**	**106%**
ஆ) காப்பும் மிகுதியும்	30	30	45	**100%**	**100%**	**150%**
5. நீண்டகாலப் பொறுப்புகள்						
நீண்டகாலப் கடன்கள்	70	77	84	**100%**	**110%**	**120%**
6. நடப்புப் பொறுப்புகள்						
கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள்	20	30	40	**100%**	**150%**	**200%**
மொத்தம்	220	264	275	**100%**	**120%**	**125%**
IV. சொத்துகள்						
3. நீண்டகாலச் சொத்துகள்						
அ) நிலைச் சொத்துகள்	100	118	103	**100%**	**118%**	**103%**
ஆ) நீண்டகால முதலீடுகள்	40	50	60	**100%**	**125%**	**150%**
4. நடப்புப் சொத்துகள்						
சரக்கிருப்பு	60	66	72	**100%**	**110%**	**120%**
ரொக்கம்(ம)ரொக்கத்திற்கு சமமானவை	20	30	40	**100%**	**150%**	**200%**
மொத்தம்	220	264	275	**100%**	**120%**	**125%**

நிகழ்வாய்வு

இரவி மற்றும் இரஹீம் மின்னணு சாதனங்களை வாங்கி விற்கும் ஒரு கூட்டாண்மைத் தொழிலைத் தொடங்கினர். அவர்களின் வணிகம் வெற்றிகரமாக நடந்து வந்தது. அவர்கள் தங்கள் தொழிலை விரிவுப்படுத்த விரும்பினர். ஆனால், அவ்வாறு செய்வதற்கு போதுமான பணம் அவர்களிடம் இல்லை. ஆகையால் அவர்கள் தங்கள் தொழிலை ஒரு தனிநிறுமமாக மாற்றி, அதை இரவி மற்றும் இரஹீம் வரையறு நிறுமம் என்று பதிவு செய்தனர். முதல் இரண்டு ஆண்டுகள் சட்டப்பூர்வமான சடங்குகள், பணியாளர் தேர்வு மற்றும் பல்வேறு கணக்கேடுகள் பராமரிப்பு போன்றவற்றில் கவனம் செலுத்தினர். அவர்கள் நிதிநிலை அறிக்கைகளை இந்திய நிறுமச் சட்டம் 2013 பரிந்துரை படி தயாரித்தனர். ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு வணிகத்தின் செயல்பாடுகள் நன்றாக உள்ளதா என்று அறிவதில் மிகுந்த ஆர்வம் கொண்டனர். அவர்கள் தங்கள் தொழில் முடிவுகளை தனியாள் வணிகரின் தொழிலோடு ஒப்பீடு செய்தனர்.

தற்போது பின்வருவன குறித்து விவாதிக்கவும்:

இரவி மற்றும் இரஹீம் வரையறு நிறுமத்தின் நிதிநிலை அறிக்கைகளை மதிப்பீடு செய்ய ஆர்வமுள்ளவர்கள் யார்? ஏன்?

இரவி மற்றும் இரஹீம் வரையறு நிறுமம் இந்திய நிறுமச் சட்டம் 2013 – ன் படி நிதிநிலை அறிக்கைகளை ஏன் தயாரிக்க வேண்டும்?

இரவி மற்றும் இரஹீம் வரையறு நிறுமம் தன்னுடைய நிதிநிலை அறிக்கைகளை ஆய்வு செய்ய சில கருவிகளை பரிந்தரை செய்யவும்.

இரவி மற்றும் இரஹீம் வரையறு நிறுமம் மூன்று ஆண்டுகளுக்கு அதிகமான தகவல்களை ஒப்பீடு செய்து ஆய்வு செய்ய சிறந்த கருவி எது?

இரவி மற்றும் இரஹீம் வரையறு நிறுமம் தங்கள் பணியாளர்கள் திறமையான மற்றும் செயல்நோக்கம் உடையவர்களா என்று தெரிந்து கொள்ள விரும்புகின்றனர். இதனை நிதிநிலை அறிக்கைகள் வாயிலாக ஆய்வு செய்வது சாத்தியமா?

தன்னுடைய தொழில் முடிவுகளை தனியாள் வணிகரின் தொழில் முடிவுடன் ஒப்பிடும் இரவி மற்றும் இரஹீம் வரையறு நிறுமத்தின் தீர்மானம் குறித்து நீங்கள் சிந்தித்ததுண்டா? இது நியாயமான முடிவைத் தருமா?

1. இரவி மற்றும் இரஹீம் வரையறு நிறுமத்தின் நிதிநிலை அறிக்கைகளை மதிப்பீடு செய்ய ஆர்வமுள்ளபவர்கள் உரிமையாளர்களாகிய இரவி, இரஹீம்...
2. அவர்கள் தங்கள் கூட்டாண்மையினை வரையறு நிறுமமாக பதிவு செய்யததால் கட்டாயம் இந்திய நிறுமச் சட்டம்2013-ன் படியே நிதிநிலை அறிக்கை தயாரிக்க வேண்டும்.
3. ஒப்பீட்டு அறிக்கை, பொது அளவு அறிக்கை, போக்குப் பகுப்பாய்வு, நிதி ஓட்டப் பகுப்பாய்வு மற்றும் ரொக்க ஓட்டப் பகுப்பாய்வு.
4. போக்குப் பகுப்பாய்வு.
5. பணியாளர்களின் திறன் மற்றும் செயல் நோக்கத்தை நிதிநிலை அறிக்கைகள் வாயிலாக ஆய்வு செய்வது சாத்தியமே.
6. இது நியாமான முடிவு அல்ல. ஒரு நிறுமத்தை மற்றும் நிறுமத்திடம் ஒப்பிட்டால் நிறும மேலாளர்களின் மேலாண்மை முடிவுகள் பயன் தரும். வேறு தொழிலமைப்புடன் ஒப்பிட்டு பார்ப்பதில் பயனில்லை.

தொடர் ஆய்விற்கு
நிதிநிலை அறிக்கையில் உள்ள எண்ணற்றத் தொகைகளை ஒருங்கிணைத்து அவற்றை பொதுவான தலைப்பின் கீழ் கொண்டுவந்து பகுப்பாய்வு செய்வது சாத்தியமா?

நிதிநிலை அறிக்கையில் உள்ள எண்ணற்றத் தொகைகளை ஒருங்கிணைத்து அவற்றை பொதுவான தலைப்பின் கீழ் கொண்டுவந்து பகுப்பாய்வு செய்வது சாத்தியமே. ஏனெனில் ஒரு நிறுமத்தின் நிதிநிலை அறிக்கையில் பொதுவான தலைப்புகள் மட்டுமே இடம் பெறும். மற்றவைகள் அனைத்தும் நிறுமத்தின் கணக்குகளின் குறிப்பில் காட்டப்பட்டு பொதுவான தலைப்புகள் மட்டுமே நிதிநிலை அறிக்கையில் இடம் பெறும்.

உன்னால் சாதிக்க முடியாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒரு போதும் நினைக்காதே!!!
-சுவாமி விவேகானந்தர்

R. MUTHUKOODALINGA RAJA, M.Com, B.Ed
KVS HSS, VIRUDHUNAGAR.
9442475597, 9842693649

Padasalai

அலகு 9 விகிதப் பகுப்பாய்வு

சூத்திரங்கள், மற்றும் பயிற்சி கணக்குகள்

1. **கணக்கியல் விகிதங்கள் பின்வரும் வடிவங்களில் வெளிப்படலாம்**
   1. விகிதாச்சாரம் (உதாரணம் 4:5)
   2. சதவிகிதம் (உதாரணம் 10%)
   3. மடங்கு (உதாரணம் 3 மடங்குகள்)
   4. பகுதி பின்னங்கள் (உதாரணம் 3/4 மடங்குகள்)
2. **விகிதங்களின் வகைகள்:**
   1. பாரம்பரிய அடிப்படை
   2. செயல்பாட்டின் அடிப்படை
3. **பாரம்பரிய அடிப்படையிலான விகிதங்கள்**



4. **செயல்பாட்டு அடிப்படையிலான விகிதங்கள்:**



5. **நீர்மைத் தன்மை விகிதங்கள்:**
   1. நடப்பு விகிதம் 2. விரைவு விகிதம்

6. **நடப்பு விகிதம்: குறிப்பு:**வழக்கமாக ஏற்றதான நடப்பு விகிதம் 2:1 (வியாபாரம் பொறுப்புகளை தீர்க்க தேவையான சொத்துக்களை அதிக அளவில் வைத்துள்ளது என்பது பொருள். வேறு வகையில் கூறுவோமேயானால் வியாபாரம் நல்ல இலாபம் ஈட்டும் நிலையில் உள்ளது எனக் கொள்ளலாம்)

$$\text{நடப்பு விகிதம்} = \frac{\text{நடப்புச் சொத்துகள்}}{\text{நடப்புப் பொறுப்புகள்}}$$

நடப்புச் சொத்துகள்	நடப்புப் பொறுப்புகள்
நடப்புச் சொத்துகள் என்பது ரொக்க வடிவில் உள்ள அல்லது ரொக்கத்திற்குச் சமமான அல்லது எளிதில் ரொக்கமாக மாற்றக்கூடிய அல்லது குறுகிய காலத்தில் ரொக்கமாக அல்லது சமமாக மாற்றக் கூடிய சொத்துகள் ஆகும். அதாவது, ஓராண்டிற்குள் அல்லது ஒரு இயக்கச் சுழற்சியின் காலத்திற்குள் ரொக்கமாக மாற்றப்பட வேண்டும்.	நடப்புப் பொறுப்புகள் ஒரு குறுகிய காலத்திற்குள் திரும்பச் செலுத்தக்கூடிய பொறுப்புகள் ஆகும். அதாவது, ஓராண்டிற்குள் அல்லது ஒரு இயக்கச் சுழற்சியின் காலத்திற்குள் செலுத்தப்பட வேண்டும்.
நடப்புச் சொத்துகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியது (i) குறுகியகால முதலீடுகள் (ii) சரக்கிருப்பு (iii) கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகள் (பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மற்றும் பற்பல கடனாளிகள் கழிக்க கடனாளிகள் மீதான ஐயக்கடன் ஒதுக்கு) (iv) ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகள் கைரொக்கம், வங்கி ரொக்கம் போன்றவை) (v) குறுகிய காலக் கடன்கள் மற்றும் முன்பணம் கொடுத்தது (vi) பிற நடப்புச் சொத்துகள் (முன்கூட்டிச் செலுத்திய செலவுகள், வருமானம் பெறவேண்டியது போன்றவை)	**நடப்புப் பொறுப்புகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியது** (i) குறுகியகாலக் கடன்கள் (ii) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் (செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு மற்றும் பற்பல கடனீந்தோர்) (iii) பிற நடப்புப் பொறுப்புகள் (செலவுகள் செலுத்த வேண்டியது, முன்கூட்டிப் பெற்ற வருமானம் போன்றவை) (iv) குறுகியகால ஒதுக்குகள்

7. **விரைவு விகிதம்: குறிப்பு:**வழக்கமாக ஏற்றதான நடப்பு விகிதம் 1:1 (வியாபாரம் பொறுப்புகளை தீர்க்க தேவையான சொத்துக்களை சமமான அளவில் வைத்துள்ளது என்பது பொருள்.)

$$\text{விரைவு விகிதம்} = \frac{\text{நீர்மைச் சொத்துகள்}}{\text{நடப்புப் பொறுப்புகள்}}$$

நீர்மைச் சொத்துகள் = நடப்புச் சொத்துகள் – சரக்கிருப்பு – முன்கூட்டிச் செலுத்திய செலவுகள்
விரைவு விகிதம் அதிகமாக இருக்கும் போது, நிறுவனத்தின் குறுகிய கால நிதி நிலை சிறப்பாக இருக்கும்.

8. <u>**நீண்டகால கடன் தீர்க்கும் திறன் விகிதங்கள்**</u>
   1. புற அக பொறுப்புகள் விகிதம்
   2. உரிமையாளர் விகிதம்
   3. முதல் உந்துதிறன் விகிதம்

9. <u>**புற அக பொறுப்புகள் விகிதம்**</u>

$$\text{புற அக பொறுப்புகள் விகிதம்} = \frac{\text{நீண்டகால கடன்}}{\text{பங்குதாரர் நிதி}}$$

நீண்டகால கடன்	பங்குதாரர் நிதி
நீண்டகால கடன் என்பது கடனீட்டுப் பத்திரங்கள், பத்திரங்கள், மற்றும் பிற நீண்டகால கடன்களை உள்ளடக்கியதாகும்.	பங்குதாரர் நிதி = நேர்மைப் பங்குமுதல் + முன்னுரிமைப் பங்குமுதல் + காப்புகள் மற்றும் மிகுதி

வழக்கமாக புற அக பொறுப்புகள் விகிதம் 1:1 ஆக இருந்தால் தொழில் திருப்திகரமானதாக கருதப்படுகிறது.

பங்குதாரர் நிதியை கீழ்க்கண்டவாறும் கணக்கிடலாம்:
பங்குதாரர் நிதி = மொத்த சொத்துகள் – நீண்டகால பொறுப்புகள் – நடப்புப் பொறுப்புகள்

10. **உரிமையாளர் விகிதம்:**

$$\text{உரிமையாளர் விகிதம்} = \frac{\text{பங்குதாரர் நிதி}}{\text{மொத்த சொத்துகள்}}$$

அதிக உரிமையாளர் விகிதம், கடன் வழங்கியவர்கள் மற்றும் கடனீந்தோருக்கு அதிக திருப்தியைத் தருகிறது. ஏனெனில், நிறுவனம் நிதி திரட்ட வெளிப்புற ஆதாரங்களை குறைவாகவே சார்ந்துள்ளது.

11. **முதல் உந்துதிறன் விகிதம்:**

$$\text{முதல் உந்துதிறன் விகிதம்} = \frac{\text{நிலையான வட்டி மற்றும் நிலையான பங்காதாயம் ஈட்டுகின்ற நிதிகள்}}{\text{நேர்மைப் பங்குதாரர் நிதி}}$$

நிலையான வட்டி அல்லது நிலையான பங்காதாயம் ஈட்டுகின்ற நிதிகள்	நேர்மைப் பங்குதாரர் நிதி
முன்னுரிமைப் பங்குமுதல் கடனீட்டுப் பத்திரங்கள் பத்திரங்கள் நிலையான வட்டி செலுத்தும் நீண்டகாலக் கடன்கள்	**நேர்மைப் பங்குதாரர் நிதி** = நேர்மைப் பங்குமுதல் + காப்புகள் மற்றும் மிகுதி

முதல் உந்துதிறன் விகிதம் என்பது நீண்ட காலக் கடன் தீர்க்கும், செயல்திறன் மற்றும் மூலதனக் கட்டமைப்பின் ஒரு அளவீடாகும். முதல் உந்துதிறன் விகிதம் ஒன்றுக்கு அதிகமாக இருக்கும் போது, நிறுவனம் உயர் உந்துதல் திறனைக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

12. **சுழற்சி விகிதங்கள்:**

1. சரக்கிருப்பு சுழற்சி விகிதம்
2. கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகளின் சுழற்சி விகிதம்
3. கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் சுழற்சி விகிதம்
4. நிலைச்சொத்துகள் சுழற்சி விகிதம்

13. **சரக்கிருப்பு சுழற்சி விகிதம்**

$$\text{சரக்கிருப்பு சுழற்சி விகிதம்} = \frac{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாயின் அடக்கவிலை}}{\text{சராசரி சரக்கிருப்பு}}$$

விற்பனை மூலம் பெற்ற வருவாயின் அடக்கவிலை = கொள்முதல் செய்த சரக்குகள் + முடிவடைந்த பொருள்களின் சரக்கிருப்பு மாற்றம் + நேரடிச் செலவுகள்

(அல்லது)

= விற்பனை மூலம் பெற்ற வருவாய் – மொத்த இலாபம்

மாணவர் குறிப்பு

விற்பனை மூலம் பெற்ற வருவாய் என்பது நிகர விற்பனை ஆகும்.

சரக்கிருப்பு மாற்றம் = தொடக்கச் சரக்கிருப்பு – இறுதிச் சரக்கிருப்பு

நேரடிச் செலவுகள் = கூலி + உள் தூக்குக்கூலி + உள் ஏற்றிச்செல் செலவு + துறைமுகக் கட்டணம் + உள் நுழைவு வரி + இறக்குமதி வரி + நிலக்கரி, எரிவாயு, எரிபொருள் மற்றும் எரிசக்தி + இதர நேரடிச் செலவுகள்

$$\text{சராசரி சரக்கிருப்பு} = \frac{\text{தொடக்கச் சரக்கிருப்பு} + \text{இறுதிச் சரக்கிருப்பு}}{2}$$

மாணவர் குறிப்பு:

தொடக்கச் சரக்கிருப்பு இல்லாதபோது, இறுதிச் சரக்கிருப்பு, சராசரி சரக்கிருப்பிற்கு பதிலாக எடுத்துக்கொள்ளப்படும்.

சரக்கிருப்பு மாற்று காலம்

சரக்கிருப்பு மாற்று காலம் என்பது சரக்கிருப்பை விற்பனை செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்படும் காலம் ஆகும். குறுகிய சரக்கிருப்பு மாற்று காலம், சரக்கிருப்பு மேலாண்மையின் அதிக செயல்திறனை குறிப்பிடுகிறது. இது பின்வருமாறு கணக்கிடப்படுகிறது:

$$\text{சரக்கிருப்பு மாற்று காலம் (நாட்களில்)} = \frac{\text{ஒரு ஆண்டிலுள்ள நாட்கள்}}{\text{சரக்கிருப்பு சுழற்சி விகிதம்}}$$

$$\text{சரக்கிருப்பு மாற்று காலம் (மாதங்களில்)} = \frac{\text{ஒரு ஆண்டிலுள்ள மாதங்கள்}}{\text{சரக்கிருப்பு சுழற்சி விகிதம்}}$$

14. **கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகளின் சுழற்சி விகிதம்:**

$$\text{கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகளின் சுழற்சி விகிதம்} = \frac{\text{கடன் விற்பனை மூலம் பெற்ற வருவாய்}}{\text{கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகளின் சராசரி}}$$

$$\text{கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகளின் சராசரி} = \frac{\left[\text{கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகளின் தொடக்க இருப்பு}\right] + \left[\text{கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகளின் இறுதி இருப்பு}\right]}{2}$$

கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகள் = கடனாளிகள் + பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுகள்

கடன் விற்பனை மூலம் பெற்ற வருவாய் (நிகரக் கடன் விற்பனை), இவ்விகிதம் கணக்கிடுவதற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஏனெனில், கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகள் கடன் விற்பனை மூலம் மட்டும் தான் எழுகிறது. இவ்விகிதம் அதிகமாக இருந்தால், பெறவேண்டியவைகளை வசூலிக்கும் மேலாண்மை செயல்திறன் அதிகமாக இருக்கிறது என்று பொருள்.

மாணவர் குறிப்பு

கணக்குகள் மூலம் பெறவேண்டியவைகளின் தொடக்க இருப்பு கொடுக்கப்படாதபோது, இவ்விகிதத்தைக் கணக்கிட சராசரி கணக்குகள் மூலம் பெறவேண்டியவைகளின் சராசரிக்குப் பதிலாக, கணக்குகள் மூலம் பெறவேண்டியவைகளின் இறுதி இருப்பை எடுத்துக்கொள்ள வேண்டும்.

கடன் வசூலிப்புக் காலம்

கடன் வசூலிப்புக் காலம் என்பது கணக்குகள் மூலம் பெறவேண்டியவைகளை வசூலிப்பதற்கு எடுத்துக் கொள்ளும் சராசரி காலம் ஆகும். கடன் வசூலிக்கும் காலம் குறைவாக இருக்கும் போது கணக்குகள் மூலம் பெறவேண்டியவைகளிலிருந்து பணம் வசூலிக்கும் மேலாண்மை செயல்திறன் அதிகமாக இருக்கிறது என்று பொருள். கடன் வசூலிப்புக் காலம் கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படுகிறது:

$$\text{கடன் வசூலிப்புக் காலம் (நாட்களில்)} = \frac{\text{ஒரு ஆண்டிலுள்ள நாட்கள்}}{\text{கணக்குகள் மூலம் பெறவேண்டியவைகளின் சுழற்சி விகிதம்}}$$

$$\text{கடன் வசூலிப்புக் காலம் (மாதங்களில்)} = \frac{\text{ஒரு ஆண்டிலுள்ள மாதங்கள்}}{\text{கணக்குகள் மூலம் பெறவேண்டியவைகளின் சுழற்சி விகிதம்}}$$

மாணவர் குறிப்பு

கணக்குகள் மூலம் பெறவேண்டியவைகளின் தொடக்க இருப்பு கொடுக்கப்படாததால், கணக்குகள் மூலம் பெறவேண்டியவைகளின் சராசரிக்குப்பதிலாக, கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகளின் இறுதி இருப்பு எடுத்துக்கொள்ளப்பட்டது.

15. **கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் சுழற்சி விகிதம்:**

$$\text{கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் சுழற்சி விகிதம்} = \frac{\text{நிகர கடன் கொள்முதல்}}{\text{கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் சராசரி}}$$

நிகர கடன் கொள்முதல் = மொத்த கடன் கொள்முதல் – கொள்முதல் திருப்பம்

$$\text{கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் சராசரி} = \frac{\left[\text{கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் தொடக்க இருப்பு}\right] + \left[\text{கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் இறுதி இருப்பு}\right]}{2}$$

கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் = வியாபார கடனீந்தோர் + செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுகள்

இவ்விகிதம் அதிகமாக இருந்தால், செலுத்த வேண்டியவைகளை மேலாண்மைச் செய்வதில் மேலாண்மை செயல்திறன் அதிகமாக இருக்கிறது என்று பொருள். அதாவது, சரக்களித்தோருக்கு செலுத்த வேண்டியத்தொகை விரைவாக செலுத்தித் தீர்க்கப்படுகிறது.

மாணவர் குறிப்பு

தொடக்கக் கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் இல்லாதபோது, சராசரி கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளுக்குப் பதிலாக இறுதிக் கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

கடன் செலுத்தும் காலம்

கடன் செலுத்தும் காலம் என்பது, கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளைச் செலுத்துவதற்கு வணிகம் எடுத்துக் கொள்ளும் சராசரி காலம் ஆகும். கடன் செலுத்தும் காலம் குறைவாக இருக்கும் போது, கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளை மேலாண்மை செய்வதில் மேலாண்மை செயல்திறன் அதிகமாக இருக்கிறது என்று பொருள். அதாவது, செலுத்த வேண்டியத்தொகை விரைவாக செலுத்தித் தீர்க்கப்படுகிறது. கடன் செலுத்தும் காலம் கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படுகிறது:

$$\text{கடன் செலுத்தும் காலம் (நாட்களில்)} = \frac{\text{ஒரு ஆண்டிலுள்ள நாட்கள்}}{\text{கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் சுழற்சி விகிதம்}}$$

$$\text{கடன் செலுத்தும் காலம் (மாதங்களில்)} = \frac{\text{ஒரு ஆண்டிலுள்ள மாதங்கள்}}{\text{கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் சுழற்சி விகிதம்}}$$

16. <u>நிலைச்சொத்துகள் சுழற்சி விகிதம்:</u>

$$\text{நிலைச் சொத்துகள் சுழற்சி விகிதம்} = \frac{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}}{\text{சராசரி நிலைச் சொத்துகள்}}$$

$$\text{சராசரி நிலைச் சொத்துகள்} = \frac{\text{தொடக்க நிலைச் சொத்துகள் + இறுதி நிலைச் சொத்துகள்}}{2}$$

நிலைச் சொத்துகள் சுழற்சி விகிதம் அதிகமாக இருந்தால், நிலைச் சொத்துகளைப் பயன்படுத்துவதில் மேலாண்மைச் செயல்திறன் அதிகமாக இருக்கிறது என்று பொருள்.

நிலைச்சொத்துகள் சுழற்சி விகிதத்தை, விற்பனை மூலம் பெற்ற வருவாயைப் பயன்படுத்தி கணக்கிடுவதற்குப் பதிலாக விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்கவிலை கொண்டும் கணக்கிடலாம்.

மாணவர் குறிப்பு

தொடக்க நிலைச் சொத்துகள் தரப்படாததால், சராசரி நிலைச் சொத்துகளுக்குப் பதிலாக இறுதி நிலைச் சொத்துகள் எடுத்துக்கொள்ளப்பட்டது.

17. <u>இலாபத்தன்மை விகிதங்கள்:</u>
    1. மொத்த இலாப விகிதம்
    2. இயக்க அடக்க விலை விகிதம்
    3. இயக்க இலாப விகிதம்
    4. நிகர இலாப விகிதம்
    5. முதலீட்டின் மீதான வருவாய்

18. மொத்த இலாப விகிதம்

$$\text{மொத்த இலாப விகிதம்} = \frac{\text{மொத்த இலாபம்}}{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}} \times 100$$

மொத்த இலாபம் = விற்பனை மூலம் பெற்ற வருவாய் – விற்பனை மூலம் பெற்ற வருவாயின் அடக்கவிலை

அதிக மொத்த இலாப விகிதம் அதிக இலாபத்தன்மையைக் காட்டுகிறது. ஒரு வணிக நிறுவனத்தால் செலுத்தப்படும் மறைமுகச் செலவுகளை எதிர்நோக்குவதற்கு அது போதுமானதாக இருக்க வேண்டும்.

19. இயக்க அடக்க விலை விகிதம்

$$\text{இயக்க அடக்க விலை விகிதம்} = \frac{\text{இயக்க அடக்க விலை}}{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}} \times 100$$

இயக்க அடக்க விலை என்பது வணிகத்தின் செயல்பாட்டு நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அடக்க விலை ஆகும்.

இயக்க அடக்க விலை = விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்க விலை + இயக்கச் செலவுகள்

இயக்கச் செலவுகள் = பணியாளர் நலன்களுக்கான செலவுகள் + தேய்மானம் + அலுவலக மற்றும் நிர்வாகம் தொடர்பான பிற செலவுகள், விற்பனை மற்றும் பகிர்வுச் செலவுகள்

குறைவான இயக்க அடக்க விலை விகிதம் அதிகமான இலாபத்தைக் காட்டுகிறது. குறைவான இயக்க அடக்க விலை விகிதம், கடன்மீது வட்டி, நிலைச் சொத்துகள் விற்பனை மீதான நட்டம் போன்ற இயக்கம் சாரா செலவுகளைச் செலுத்துவதற்கு வணிகத்தில் தொகை அதிக அளவு உள்ளது என்பதைக் குறிக்கிறது.

மாணவர் குறிப்பு

நிலைச்சொத்துகள் விற்பனை மீதான நட்டம் ஒரு இயக்கம் சாரா செலவு. எனவே, இது தவிர்க்கப்பட வேண்டும்.

20. இயக்க இலாப விகிதம்:

$$\text{இயக்க இலாப விகிதம்} = \frac{\text{இயக்க இலாபம்}}{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}} \times 100$$

இதற்கு மாற்றாக, இயக்க இலாப விகிதம் கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படலாம்.

இயக்க இலாப விகிதம் = 100 – இயக்க அடக்க விலை விகிதம்

இயக்க இலாபம் = விற்பனை மூலம் பெற்ற வருவாய் – இயக்க அடக்க விலை

அதிக இயக்க இலாப விகிதம் அதிக இலாபத்தைக் காட்டுகிறது. அதிக இயக்க இலாப விகிதம், வணிகத்தில் இயக்கம் சாரா செலவுகளைச் செலுத்துவதற்கான தொகை அதிகமாக உள்ளதைக் காட்டுகிறது.

மாணவர் குறிப்பு

இயக்க அடக்க விகிதம் + இயக்க இலாப விகிதம் = 100%

21. நிகர இலாப விகிதம்:

$$\text{நிகர இலாப விகிதம்} = \frac{\text{வரிக்குப் பின்னர் உள்ள நிகர இலாபம்}}{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}} \times 100$$

வரிக்குப் பின்னர் உள்ள நிகர இலாபம் = மொத்த இலாபம் + மறைமுக வருமானங்கள் – மறைமுகச் செலவுகள் – வரி

அல்லது

வரிக்குப் பின்னர் உள்ள நிகர இலாபம் = விற்பனை மூலம் பெற்ற வருவாய் – விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்கவிலை – இயக்கச் செலவுகள் – இயக்கம் சாராச் செலவுகள் + இயக்கம் சாரா வருமானங்கள் – வரி

நிகர இலாப விகிதம், வணிக நிறுவனத்தின் ஒட்டுமொத்த இலாபத் தன்மையைக் காட்டுகிறது. அதிக நிகர இலாப விகிதம் அதிக இலாபத் தன்மையைக் காட்டுகிறது.

குறிப்பு:வரி பற்றிய தகவல்கள் கொடுக்கப்படவில்லையெனில் வரி செலுத்த வேண்டியதில்லை.

22. முதலீடு மீதான வருவாய் விகிதம்:

$$\text{முதலீடு மீதான வருவாய்} = \frac{\text{வட்டி மற்றும் வரிக்கு முன்னர் உள்ள நிகர இலாபம்}}{\text{பயன்படுத்தப்பட்ட முதல்}} \times 100$$

பயன்படுத்தப்பட்ட முதல் = பங்குதாரர் நிதி + நீண்டகாலப் பொறுப்புகள்

அதிக முதலீடு மீதான வருவாய் வணிகத்தில் அதிக இலாபத்தைக் காட்டுகிறது மற்றும் குறைவான முதலீடு மீதான வருவாய் குறைவான இலாபத்தைக் காட்டுகிறது.

நினைவில் கொள்ள வேண்டியவை

- கணக்கியல் விகிதம் என்பது நிதிநிலை அறிக்கைகளில் இடம் பெற்றுள்ள இரு இனங்கள் அல்லது அதற்கும் அதிகமான இனங்களுக்கு இடையே உள்ள தொடர்பினை கணிதவியல் முறையில் கூறுவது ஆகும்
- விகிதங்களை செயல்பாடுகளின் அடிப்படையில், நீர்மைத்தன்மை விகிதங்கள், நீண்டகால கடன் தீர்க்கும் திறன் விகிதங்கள், இலாபத்தன்மை விகிதங்கள் மற்றும் சுழற்சி விகிதங்கள் என்று வகைப்படுத்தலாம்.
- நீர்மைத்தன்மை விகிதங்கள், ஒரு வணிக நிறுவனத்தின் குறுகியகாலப் பொறுப்புகளை எதிர்கொள்ளும் செயல்திறனை நிர்ணயிக்க உதவுகின்றன.
- நீண்டகால கடன் தீர்க்கும் திறன் விகிதங்கள், ஒரு வணிக நிறுவனத்தின் நீண்டகாலக் கடன்களை திரும்பச் செலுத்தும் செயல்திறனை நிர்ணயிக்க உதவுகின்றன.
- இலாபத்தன்மை விகிதங்கள், ஒரு வணிக நிறுவனம் ஈட்டும் இலாபத்தன்மையைப் பகுப்பாய்வு செய்வதற்கு கணக்கிடப்படுகிறது மற்றும் இலாபத் தன்மை விகிதங்கள் பொதுவாக சதவிகிதத்தில் வெளிப்படுத்தப்படுகின்றன.
- சுழற்சி விகிதங்கள், விற்பனை மூலம் பெற்ற வருவாயை உருவாக்க சொத்துகள் அல்லது பிற இனங்கள் எவ்வாறு திறம்பட பயன்படுத்தப்படுகின்றன என்பதைக் காட்டுகின்றன.

பயிற்சி வினாக்கள்

நீர்மை விகிதங்கள்:

1. **நடப்பு விகிதத்தைக் கணக்கிடவும்**

நடப்பு விகிதம் = நடப்பு சொத்துகள்/நடப்பு பொறுப்புகள்

நடப்பு சொத்துகள் =குறுகிய கால முதலீடுகள் + சரக்கிருப்பு+கடனாளிகள் + பெ.மா.சீ + ரொக்கம்(ம)ரொக்கத்திற்கு சமமானவைகள்

நடப்பு சொத்துகள் =40000+200000+120000+80000+10000=**450000**

நடப்பு பொறுப்புகள் =கடனீந்தோர்கள் + செ.மா.சீ + கொடுபடவேண்டிய செலவுகள்

நடப்பு பொறுப்புகள் =80000+50000+20000=**150000**

நடப்பு விகிதம் = 450000/150000=3/1 ∴ **நடப்பு விகிதம் =3:1**

2. **விரைவு விகிதத்தைக் கணக்கிடவும்**

விரைவு விகிதம் = விரைவுச் சொத்துகள்/நடப்பு பொறுப்புகள்

விரைவுச் சொத்துகள் = நடப்புச் சொத்துகள் - சரக்கிருப்பு - முன்கூட்டிச் செலுத்திய செலவுகள்

விரைவுச் சொத்துகள் = 450000-70000-20000=**360000**

விரைவு விகிதம் = 360000/240000 =3/2 =1.5/1 ∴ **விரைவு விகிதம் = 1.5:1**

3. **நடப்பு மற்றும் விரைவு விகிதங்களை கணக்கிடவும்**

   1. **நடப்பு விகிதம்:**

நடப்பு விகிதம் = நடப்பு சொத்துகள்/நடப்பு பொறுப்புகள்

நடப்பு சொத்துகள் =160000+320000+80000+40000=**600000**

நடப்பு பொறுப்புகள் =50000+310000+15000+25000=400000

நடப்பு விகிதம் = 600000/400000=3/2=1.5/1 ∴ **நடப்பு விகிதம் =1.5:1**

   2. **விரைவு விகிதம்:**

விரைவு விகிதம் = விரைவுச் சொத்துகள்/நடப்பு பொறுப்புகள்

விரைவுச் சொத்துகள் = 600000-160000-40000=**400000**

விரைவு விகிதம் = 400000/400000 =1/1 ∴ **விரைவு விகிதம் = 1:1**

நீண்டகால கடன் தீர்க்கும் விகிதங்கள்:

4. **புறஅக பொறுப்பு விகிதத்தைக் கணக்கிடுதல்**

புறஅக பொறுப்புகள் விகிதம் = நீண்டகாலக் கடன்/பங்குதாரர் நிதி

நீண்காலக் கடன் = கடனீட்டுப் பத்திரங்கள் + இதர நீண்டகாலக் கடன்கள்

நீண்காலக் கடன் = 600000

பங்குதாரர் நிதி = நேர்மைப்பங்கு முதல் + முதன்மைப்பங்கு முதல் + காப்பு(ம)மிகுதி **(அல்லது)**

பங்குதாரர் நிதி = மொத்த சொத்துகள் - நீண்டகால பொறுப்புகள் - நடப்பு பொறுப்புகள்

பங்குதாரர் நிதி = 600000+200000 =800000

புறஅக பொறுப்புகள் விகிதம் = 600000/800000 =3/4=0.75/1 **புறஅக பொறுப்புகள் விகிதம் = 0.75:1**

5. **உரிமையாளர் விகிதத்தைக் கணக்கிடுதல்**

உரிமையாளர் விகிதம் = பங்குதாரர் நிதி/மொத்த சொத்துகள்

உரிமையாளர் விகிதம் = 250000+150000+50000/600000 =450000/600000=0.75/1

∴உரிமையாளர் விகிதம் = 0.75:1

6. <u>முதல் உந்துதிறன் விகிதத்தைக் கணக்கிடுதல்</u>

முதல் உந்துதிறன் விகிதம் = நிலையான வட்டி(ம)பங்காதாயம் தரும் நிதிகள்/நேர்மைப் பங்குதார் நிதி

நிலையான வட்டி(ம)பங்காதாயம் தரும் நிதிகள் =முன்னுரிமைப் பங்கு முதல் +கடனீட்டுப் பத்திரம் +நீணடகால கடன்கள்

நேர்மைப் பங்குதார் நிதி= நேர்மைப் பங்கு முதல் +காப்பு(ம)மிகுதி

முதல் உந்துதிறன் விகிதம் = 100000+300000/400000+250000+150000=400000/800000=1/2=0.5/1

முதல் உந்துதிறன் விகிதம் = 0.5:1

7. <u>**ஜேம்ஸ் நிறுமத்தின் தகவல்களைக் கொண்டு நீண்டகால கடன் தீர்க்கும் விகிதங்களை கணக்கிடவும்.**</u>

1. <u>புறஅக பொறுப்புகள் விகிதம்:</u>

புறஅக பொறுப்புகள் விகிதம் = நீண்டகாலக் கடன்/பங்குதாரர் நிதி

புறஅக பொறுப்புகள் விகிதம் = 300000/600000=1/2=0.5/1=**0.5:1**

∴புறஅக பொறுப்புகள் விகிதம் =0.5:1

2. <u>உரிமையாளர் விகிதத்தைக் கணக்கிடுதல்</u>

உரிமையாளர் விகிதம் = பங்குதாரர் நிதி/மொத்த சொத்துகள்

உரிமையாளர் விகிதம் = 250000+200000+150000/1200000 =600000/1200000=1/2=0.5/1

∴உரிமையாளர் விகிதம் = 0.5:1

3. <u>முதல் உந்துதிறன் விகிதத்தைக் கணக்கிடுதல்</u>

முதல் உந்துதிறன் விகிதம் = நிலையான வட்டி(ம)பங்காதாயம் தரும் நிதிகள்/நேர்மைப் பங்குதார் நிதி

நிலையான வட்டி(ம)பங்காதாயம் தரும் நிதிகள் =முன்னுரிமைப் பங்கு முதல் +கடனீட்டுப் பத்திரம் +நீணடகால கடன்கள்

நேர்மைப் பங்குதார் நிதி= நேர்மைப் பங்கு முதல் +காப்பு(ம)மிகுதி

முதல் உந்துதிறன் விகிதம் = 200000+300000/+250000+150000=500000/400000=5/4=1.25/1

முதல் உந்துதிறன் விகிதம் = 1.25:1

<u>**சுழற்சி விகிதங்கள்:**</u>

8. <u>**சரக்கிருப்பு சுழற்சி விகிதம்(ம)சரக்கிருப்பு மாற்று காலம் கணக்கிடவும்:**</u>

சரக்கிருப்பு சுழற்சி விகிதம் = விற்பனை மூலம் பெற்ற வருவாய்கான அடக்கவிலை/சராசரி சரக்கிருப்பு

விற்பனை மூலம் பெற்ற வருவாய்கான அடக்கவிலை = கொள்முதல் செய்த சரக்கு+சரக்கிருப்பு மாற்றம் +நேரடிச் செலவுகள்

சரக்கிருப்பு மாற்றம் = தொடக்க சரக்கிருப்பு - இறுதிசரக்கிருப்பு= 170000 – 130000 =40000

விற்பனை மூலம் பெற்ற வருவாய்கான அடக்கவிலை = 690000+40000+20000 = 750000

சராசரி சரக்கிருப்பு = தொடக்க சரக்கிருப்பு+இறுதிச்சரக்கிருப்பு/2

சராசரி சரக்கிருப்பு = 170000+130000/2=300000/2=150000

சரக்கிருப்பு சுழற்சி விகிதம் =750000/150000=5 மடங்குகள்

சரக்கிருப்பு மாற்று காலம்(மாதங்களில்) = ஓராண்டிலுள்ள மாதங்கள்/சரக்கிருப்பு விகிதம்

சரக்கிருப்பு மாற்று காலம்(மாதங்களில்) = 12/5=2.4 மாதங்கள்

9. <u>**கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகளின் சுழற்சி விகிதம் கணக்கிடவும்:**</u>

க.மூ.பெ.வே.சுழற்சி விகிதம் = கடன் விற்பனை மூலம் பெற்ற வருவாய்/க.மூ.பெ.வே. சராசாரி.

க.மூ.பெ.வே = கடனாளிகள்+பெ.மா.சீ

∴கடன் விற்பனை மூலம் பெற்ற வருவாய் = 1000000

க.மூ.பெ.வே. சராசாரி = க.மூ.பெ.வே.தொடக்க இருப்பு+ க.மூ.பெ.வே.இறுதி இருப்பு

∴க.மூ.பெ.வே. சராசாரி = 110000+140000 =250000

க.மூ.பெ.வே.சுழற்சி விகிதம் 1000000/250000=4 மடங்குகள்

கடன் வசூலிப்பு காலம் = ஓராண்டிலுள்ள மாதங்கள்/க.மூ.பெ.வே.சுழற்சி விகிதம் = 12/4=3 மாதங்கள்

மாணவர் குறிப்பு

கணக்குகள் மூலம் பெறவேண்டியவைகளின் தொடக்க இருப்பு கொடுக்கப்படாததால், கணக்குகள் மூலம் பெறவேண்டியவைகளின் சராசரிக்குப்பதிலாக, கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகளின் இறுதி இருப்பு எடுத்துக்கொள்ளப்பட்டது.

10. <u>கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் சுழற்சி விகிதம் கணக்கிடவும்:</u>

க.மூ.செ.வே.சுழற்சி விகிதம் = நிகர கடன் கொள்முதல்/க.மூ.செ.வே. சராசாரி.

நிகரகடன் கொள்முதல் = மொத்தக் கடன் கொள்முதல்-கொள்முதல் திருப்பம்

க.மூ.செ.வே. = கடனீந்தோர்கள்+செ.மா.சீ

∴கடன் கொள்முதல் = 950000

க.மூ.செ.வே. சராசாரி = க.மூ.செ.வே.தொடக்க இருப்பு+ க.மூ.செ.வே.இறுதி இருப்பு

∴க.மூ.செ.வே. சராசாரி = 60000+50000+45000+35000/2=190000/2=95000

க.மூ.செ.வே.சுழற்சி விகிதம் 950000/95000=**10 மடங்குகள்**

கடன் செலுத்தும் காலம் =ஓராண்டிலுள்ள நாட்கள்/க.மூ.செ.வே.சுழற்சி விகிதம்**= 365/10=36.5 நாட்கள்**

11. <u>கீதா நிறுவனத்தின் தகவல்களிலிருந்து நிலைச் சொத்ததுகள் சுழற்சி விகிதம் கணக்கிடவும்</u>

நிலை சொத்துகள் சுழற்சி விகிதம் = விற்பனை மூலம் பெற்ற வருவாய்/சராசரி நிலைச்சொத்துகள்

விற்பனை மூலம் பெற்ற வருவாய் = 5500000; சராசரி நிலைச் சொத்துகள்=500000

நிலை சொத்துகள் சுழற்சி விகிதம் =5500000/500000=**11 மடங்குகள்**

குறிப்பு: தொடக்க நிலைச் சொத்துகள் வினாவில் கொடுக்கப்படவில்லையெனில் இறுதி நிலைச் சொத்துகளை சராசரி நிலைச் சொத்துகளாக எடுத்துக் கொள்ளலாம்.

12. <u>அருணா நிறுமத்தின் தகவல்களிலிருந்து சுழற்சி விகிதங்களைக் கணக்கிடவும்.</u>

1. <u>சரக்கிருப்பு சுழற்சி விகிதம்(ம)சரக்கிருப்பு மாற்று காலம் கணக்கிடவும்:</u>

சரக்கிருப்பு சுழற்சி விகிதம் = விற்பனை மூலம் பெற்ற வருவாய்கான அடக்கவிலை/சராசரி சரக்கிருப்பு

விற்பனை மூலம் பெற்ற வருவாய்கான அடக்கவிலை = 1600000

சராசரி சரக்கிருப்பு = தொடக்க சரக்கிருப்பு+இறுதிச்சரக்கிருப்பு/2

சராசரி சரக்கிருப்பு = 360000+440000/2=800000/2=400000

சரக்கிருப்பு சுழற்சி விகிதம் **=1600000/400000=4 மடங்குகள்**

<u>2. கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகளின் சுழற்சி விகிதம் கணக்கிடவும்:</u>

க.மூ.பெ.வே.சுழற்சி விகிதம் = கடன் விற்பனை மூலம் பெற்ற வருவாய்/க.மூ.பெ.வே. சராசாரி.

∴கடன் விற்பனை மூலம் பெற்ற வருவாய் = 3500000

க.மூ.பெ.வே. சராசாரி = க.மூ.பெ.வே.தொடக்க இருப்பு+ க.மூ.பெ.வே.இறுதி இருப்பு

∴க.மூ.பெ.வே. சராசாரி = 740000+660000=1400000/2=700000

க.மூ.பெ.வே.சுழற்சி விகிதம் **3500000/700000=5 மடங்குகள்**

<u>3. கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவைகளின் சுழற்சி விகிதம் கணக்கிடவும்:</u>

க.மூ.செ.வே.சுழற்சி விகிதம் = நிகர கடன் கொள்முதல்/க.மூ.செ.வே. சராசாரி.

∴கடன் கொள்முதல் = 2100000

க.மூ.செ.வே. சராசாரி = க.மூ.செ.வே.தொடக்க இருப்பு+ க.மூ.செ.வே.இறுதி இருப்பு

∴க.மூ.செ.வே. சராசாரி = 190000+230000/2=420000/2=210000

க.மூ.செ.வே.சுழற்சி விகிதம் 2100000/210000=**10 மடங்குகள்**

4. <u>நிலைச் சொத்ததுகள் சுழற்சி விகிதம் கணக்கிடவும்</u>

நிலை சொத்துகள் சுழற்சி விகிதம் = விற்பனை மூலம் பெற்ற வருவாய்/சராசரி நிலைச்சொத்துகள்

விற்பனை மூலம் பெற்ற வருவாய் = 3500000; சராசரி நிலைச் சொத்துகள்=600000+8000000/2=700000

நிலை சொத்துகள் சுழற்சி விகிதம் =3500000/700000=**5 மடங்குகள்**

இலாபத் தன்மை விகிதங்கள்:

13. **மொத்த இலாப விகிதத்தைக் கணக்கிடவும்**

மொத்த இலாப விகிதம் = மொத்த இலாபம்/விற்பனை மூலம் பெற்ற வருவாய்x100

மொத்த இலாபம் = விற்பனை மூலம் பெற்ற வருவாய்- விற்பனை மூலம் பெற்ற வருவாய்கான அடக்கவிலை

விற்பனை மூலம் பெற்ற வருவாய் = 250000; ∴ மொத்த இலாபம் = 250000-210000=**40000**

மொத்த இலாப விகிதம் = 40000/250000x100 = 16%

14. **இயக்க அடக்கவிலை விகிதத்தைக் கணக்கிடவும்**

இயக்க அடக்கவிலை விகிதம் = இயக்க அடக்க விலை/விற்பனை மூலம் பெற்ற வருவாய் x100

இயக்க அடக்கவிலை = விற்பனை மூலம் பெற்ற வருவாய்கான அடக்க விலை+இயக்கச் செலவுகள்

விற்பனை மூலம் பெற்ற வருவாய்கான அடக்கவிலை = கொள்முதல் செய்த சரக்கு+சரக்கிருப்பு மாற்றம் +நேரடிச் செலவுகள்

=860000+40000=**900000**

இயக்கச் செலவுகள் = பணியாளர் நலனுக்கான செலவுகள் +தேய்மானம் +அலுவலக(ம)நிர்வாகம் தொடர்பான பிற செலவுகள் + விற்பனை(ம)பகிர்வுச் செலவுகள்

∴இயக்கச் செலவுகள் =160000+50000+90000=300000

இயக்க அடக்கவிலை = 900000+300000=**1200000**

இயக்க அடக்கவிலை விகிதம் =1200000/1500000 x100=80%

15. **இயக்க இலாப விகிதம் கணக்கிடவும்:**

இயக்க இலாப விகிதம் = இயக்க இலாபம்/விற்பனை மூலம் பெற்ற வருவாய்x100

இயக்க இலாப விகிதம் = 100-இயக்க அடக்கவிலை விகிதம்

இயக்க இலாபம் = விற்பனை மூலம் பெற்ற வருவாய் - இயக்க அடக்க விலை

நிலை1: **இயக்க இலாப விகிதம் = இயக்க இலாபம்/விற்பனை மூலம் பெற்ற வருவாய்x100**

இயக்க இலாப விகிதம் = 200000/800000x100=**25%**

நிலை2: **இயக்க இலாப விகிதம் = இயக்க இலாபம்/விற்பனை மூலம் பெற்ற வருவாய்x100**

இயக்க இலாபம் = விற்பனை மூலம் பெற்ற வருவாய் - இயக்க அடக்க விலை

∴இயக்க இலாபம் = 2000000-1400000=**600000;** இயக்க இலாப விகிதம் = 600000/2000000x100=**30%**

நிலை3: **இயக்க இலாப விகிதம் = இயக்க இலாபம்/விற்பனை மூலம் பெற்ற வருவாய்x100**

இயக்க இலாபம் = விற்பனை மூலம் பெற்ற வருவாய் - இயக்க அடக்க விலை

இயக்க அடக்கவிலை = விற்பனை மூலம் பெற்ற வருவாய்கான அடக்க விலை+இயக்கச் செலவுகள்

விற்பனை மூலம் பெற்ற வருவாய்கான அடக்கவிலை = விற்பனை மூலம் பெற்ற வருவாய்-மொத்த இலாபம்

மொத்த இலாபம் = 1000000 x 25/100=**250000**

விற்பனை மூலம் பெற்ற வருவாய்கான அடக்கவிலை =1000000 – 250000 =**750000**

இயக்க அடக்கவிலை = 750000+100000=**850000**

இயக்க இலாபம் = விற்பனை மூலம் பெற்ற வருவாய் - இயக்க அடக்க விலை

= 1000000 – 850000 =**150000**

இயக்க இலாப விகிதம் = 150000/1000000x100 = 15%

16. **நிகர இலாப விகிதம் கணக்கிடவும்:**

நிகர இலாப விகிதம் = வரிக்குப் பின்னர் உள்ள நிகர இலாபம்/விற்பனை மூலம் பெற்ற வருவாய்x100

வரிக்குப் பின்னர் உள்ள நிகர இலாபம் =மொத்த இலாபம்+ மறைமுக வருமானங்கள் - மறைமுகச் செலவுகள் - வரி

(அல்லது)

வரிக்குப் பின்னர் உள்ள நிகர இலாபம் =விற்பனை மூலம் பெற்ற வருவாய் - விற்பனை மூலம் பெற்ற வருவாய் - இயக்கச் செலவுகள் - இயக்கம் சாரா செலவுகள் + இயககம் சாரா வருமானங்கள் - வரி

வி.மூ.பெ.வ = 960000; வ.பி.உ.நி.இ =960000 – 550000-145000-25000= 240000

∴ நிகர இலாப விகிதம் =240000/960000x100 = 25%

17. டெரிக்ஸ்டன் நிறுமத்தின் மொத்த மற்றும் நிகர இலாப விகிதத்தைக் கணக்கிடவும்:

1. **மொத்த இலாப விகிதம்:**

மொத்த இலாப விகிதம் = மொத்த இலாபம்/விற்பனை மூலம் பெற்ற வருவாய்x100

மொத்த இலாபம் = விற்பனை மூலம் பெற்ற வருவாய்- விற்பனை மூலம் பெற்ற வருவாய்கான அடக்கவிலை

விற்பனை மூலம் பெற்ற வருவாய்கான அடக்கவிலை = கொள்முதல் செய்த சரக்கு+சரக்கிருப்பு மாற்றம் +நேரடிச் செலவுகள்

வி.மூ.பெ.வ.அ = 1880000+(-80000) = **1800000**; வி.மூ.பெ.வ = **2400000**

∴ மொத்த இலாபம் = 24000000-1800000=**600000**

மொத்த இலாப விகிதம் = 600000/24000000x100 = 25%

2. **நிகர இலாப விகிதம் கணக்கிடவும்:**

நிகர இலாப விகிதம் = வரிக்குப் பின்னர் உள்ள நிகர இலாபம்/விற்பனை மூலம் பெற்ற வருவாய்x100

வரிக்குப் பின்னர் உள்ள நிகர இலாபம் =மொத்த இலாபம்+ மறைமுக வருமானங்கள் - மறைமுகச் செலவுகள் - வரி

(அல்லது)

வரிக்குப் பின்னர் உள்ள நிகர இலாபம் =விற்பனை மூலம் பெற்ற வருவாய் - விற்பனை மூலம் பெற்ற வருவாய் - இயக்கச் செலவுகள் - இயக்கம் சாரா செலவுகள் + இயககம் சாரா வருமானங்கள் - வரி

வி.மூ.பெ.வ = 2400000;

வ.பி.உ.நி.இ =2400000 – 1880000-(-80000)-290000-110000+70000 -300000 = **240000**

∴ நிகர இலாப விகிதம் =240000/2400000x100 = 10%

18. ரொவினா நிறுமத்தின் இலாபத் தன்மை விகிதங்களை கணக்கிடவும்:

1. **மொத்த இலாப விகிதம்:** **மொத்த இலாப விகிதம் = மொத்த இலாபம்/விற்பனை மூலம் பெற்ற வருவாய்x100**

மொத்த இலாபம் = விற்பனை மூலம் பெற்ற வருவாய்- விற்பனை மூலம் பெற்ற வருவாய்கான அடக்கவிலை

விற்பனை மூலம் பெற்ற வருவாய்கான அடக்கவிலை = கொள்முதல் செய்த சரக்கு+சரக்கிருப்பு மாற்றம் +நேரடிச் செலவுகள்

வி.மூ.பெ.வ.அ = 210000+30000=**240000**; வி.மூ.பெ.வ = **400000**

∴ மொத்த இலாபம் = 400000-240000=160000**மொத்த இலாப விகிதம் = 160000/400000x100 = 40%**

2. **நிகர இலாப விகிதம் கணக்கிடவும்:**

நிகர இலாப விகிதம் = வரிக்குப் பின்னர் உள்ள நிகர இலாபம்/விற்பனை மூலம் பெற்ற வருவாய்x100

வரிக்குப் பின்னர் உள்ள நிகர இலாபம் =மொத்த இலாபம்+ மறைமுக வருமானங்கள் - மறைமுகச் செலவுகள் - வரி

(அல்லது)

வரிக்குப் பின்னர் உள்ள நிகர இலாபம் =விற்பனை மூலம் பெற்ற வருவாய் - விற்பனை மூலம் பெற்ற வருவாய் - இயக்கச் செலவுகள் - இயக்கம் சாரா செலவுகள் + இயககம் சாரா வருமானங்கள் - வரி

வி.மூ.பெ.வ = 400000; வ.பி.உ.நி.இ =400000 – 210000-30000-24000-60000+4000 = **80000**

∴ நிகர இலாப விகிதம் =80000/400000x100 = 20%

3. **இயக்க அடக்கவிலை விகிதத்தைக் கணக்கிடவும்**

இயக்க அடக்கவிலை விகிதம் = இயக்க அடக்க விலை/விற்பனை மூலம் பெற்ற வருவாய் x100

இயக்க அடக்கவிலை = விற்பனை மூலம் பெற்ற வருவாய்கான அடக்க விலை+இயக்கச் செலவுகள்

விற்பனை மூலம் பெற்ற வருவாய்கான அடக்கவிலை = கொள்முதல் செய்த சரக்கு+சரக்கிருப்பு மாற்றம் +நேரடிச் செலவுகள்

=210000+30000=240000

இயக்கச் செலவுகள் = பணியாளர் நலனுக்கான செலவுகள் +தேய்மானம் +அலுவலக(ம)நிர்வாகம் தொடர்பான பிற செலவுகள் + விற்பனை(ம)பகிர்வுச் செலவுகள்

∴இயக்கச் செலவுகள் =60000

இயக்க அடக்கவிலை = 240000+60000=**300000**

இயக்க அடக்கவிலை விகிதம் =300000/400000 x100=75%

குறிப்பு: நிதிசார் செலவுகள் என்பது இயக்கம் சாரா செலவுகள் (உதாரணம் பங்காதாயம், வட்டி செலுத்தியது)

4. **இயக்க இலாப விகிதம் கணக்கிடவும்:**

இயக்க இலாப விகிதம் = இயக்க இலாபம்/விற்பனை மூலம் பெற்ற வருவாய்x100

இயக்க இலாப விகிதம் = 100-இயக்க அடக்கவிலை விகிதம்

இயக்க இலாப விகிதம் = 100% -75% =**25%**

19. **பயன்படுத்திய முதலிலிருந்து பெற்ற வருவாய் விகிதத்தைக் கணக்கிடவும்**

முதலீடு மீதான வருவாய்=வட்டி(ம)வரிக்கு முன்னர் உள்ள நிகர இலாபம்/பயன்படுத்தப்பட்ட முதல்x100

வட்டி(ம)வரிக்கு முன்னர் உள்ள நிகர இலாபம்=₹60000

பயன்படுத்தப்பட்ட முதல் = பங்குதாரர் நிதி + நீண்டகாலப் பொறுப்புகள்

பயன்படுத்தப்பட்ட முதல் =(200000+50000)+150000=400000

முதலீடு மீதான வருவாய்=60000/400000x100=15%

நிகழ்வாய்வு

ஐந்து நண்பர்கள் ஒவ்வொருவரும் ₹ 50,000 முதலீடு செய்ய விரும்புகின்றனர். இருப்பினும், ஐவரும் தங்கள் முதலீட்டு முடிவுக்கு வெவ்வேறு அடிப்படைகளை வைத்திருக்கின்றனர். பாத்திமா அவருடைய முதலீட்டிலிருந்து அதிக வருவாய் பெறவேண்டும் என விரும்புகிறார். தேன்மொழி நன்றாக செயல்பட்டு வருகின்ற ஒரு நிறுமத்தில் முதலீடு செய்ய விரும்புகிறார். நிவேதா செலவுகளை தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் ஒரு நிறுமத்தில் முதலீடு செய்ய விரும்புகிறார். சுப்ரஜா நெறிமுறை தவறாத ஒரு முதலீட்டாளர். இவர் நிறுமத்திற்கு சரக்களித்தோர் அவர்களுக்கான தொகையை சரியான நேரத்திற்கு பெற வேண்டும் என்பதில் கவனமாக இருக்கிறார். திவ்யா நல்ல நிதி நீர்மைத்தன்மை நிலையில் உள்ள ஒரு நிறுவனத்தில் முதலீடு செய்ய விரும்புகிறார்.

அவர்கள் மூன்று வெவ்வேறு நிறுமங்களின் நிதிநிலை அறிக்கைகளை ஒப்பீடு செய்து விகிதங்கள் கணக்கிட விரும்புகின்றனர்.

ஒவ்வொருவருக்கும் அவர்களின் முதலீட்டு விருப்பத்திற்குப் பொருத்தமான விகிதங்களைப் பரிந்துரை செய்யவும்.

1. பாத்திமா – முதல் உந்துதிறன் விகிதம்
2. தேன்மொழி – நீண்டகால கடன் தீர்க்கும் திறன் விகிதங்கள்
3. நிவேதா – இயக்க அடக்க விலை விகிதம்
4. சுப்ரஜா – சுழற்சி விகிதங்கள்
5. திவ்யா – நீர்மைத் தன்மை விகிதங்கள் (நடப்பு (ம) விரைவு விகிதங்கள்)

உன்னால் சாதிக்க முடியாத காரியம் என்று

எதுவும் இருப்பதாக ஒரு போதும் நினைக்காதே!!!

-சுவாமி விவேகானந்தர்

R. MUTHUKOODALINGA RAJA, M.Com, B.Ed

KVS HSS, VIRUDHUNAGAR.

9442475597, 9842693649s

www.Padasalai.Net

படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில் பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!

Zoom Touch Below Links Download!

12th Standard	Syllabus	Books	Study Materials – EM	Study Materials - TM	Practical	Online Test (EM & TM)
	Monthly Q&A	Mid Term Q&A	Revision Q&A	PTA Book Q&A	Centum Questions	Creative Questions
	Quarterly Exam	Half Yearly Exam	Public Exam	NEET		

11th Standard	Syllabus	Books	Study Materials – EM	Study Materials - TM	Practical	Online Test (EM & TM)
	Monthly Q&A	Mid Term Q&A	Revision Q&A	Centum Questions	Creative Questions	
	Quarterly Exam	Half Yearly Exam	Public Exam	NEET		

10th Standard	Syllabus	Books	Study Materials - EM	Study Materials - TM	Practical	Online Test (EM & TM)
	Monthly Q&A	Mid Term Q&A	Revision Q&A	PTA Book Q&A	Centum Questions	Creative Questions
	Quarterly Exam	Half Yearly Exam	Public Exam	NTSE	SLAS	

9th Standard	Syllabus	Books	Study Materials	1st Mid Term	2nd Mid Term	3rd Mid Term
	Quarterly Exam	Half Yearly Exam	Annual Exam	RTE		

8th Standard	Syllabus	Books	Study Materials	1st Mid Term	2nd Mid Term	3rd Mid Term
	Term 1	Term 2	Term 3	Public Model Q&A	NMMS	Periodical Test

7th Standard	Syllabus	Books	Study Materials	1st Mid Term	2nd Mid Term	3rd Mid Term
	Term 1	Term 2	Term 3	Periodical Test	SLAS	

6th Standard	Syllabus	Books	Study Materials	1st Mid Term	2nd Mid Term	3rd Mid Term
	Term 1	Term 2	Term 3	Periodical Test	SLAS	

1st to 5th Standard	Syllabus	Books	Study Materials	Periodical Test	SLAS	
	Term 1	Term 2	Term 3	Public Model Q&A		

Exams	TET	TNPSC	PGTRB	Polytechnic	Police	Computer Instructor
	DEO	BEO	LAB Asst	NMMS	RTE	NTSE

Portal	Matrimony	Mutual Transfer	Job Portal

Volunteers	Centum Team	Creative Team	Key Answer Team

Downloads	LESSON PLAN	Department Exam	Income Tax	Forms & Proposals	Fonts	Downloads
	Proceedings	GO's	Regulation Orders	Pay Orders	Panel	

Padasalai – Official Android App – Download Here

Kindly Send Your Study Materials, Q&A to our Email ID – Padasalai.net@gmail.com